RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1720

OPEN ACCESS

# கலித்தொகையின் வழி பண்டைத்தமிழரின் வாழ்க்கை முறை

**நா. பகுஷியா பேகம் [அ, *]**

[அ] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), (பெரியார் பல்கலைக் கழகத்துடன் இணைவுபெற்றது), சேலம்-636016, தமிழ்நாடு, இந்தியா

# The Way of Life of the Ancient Tamils through the Kalithokai

**N. Bhagushia Begum [a, *]**

[a] PG & Research Department of Tamil, Sri Sarada College for Women (Autonomous), (Affiliated to Periyar University), Salem-636016, Tamil Nadu, India

* Corresponding Author: ndhanushia@gmail.com

Received: 08-04-2022
Revised: 13-10-2022
Accepted: 25-10-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

One of the Sangam books, the Kalithukku, describes the moral thoughts and the ideas of the modes of life which give benefit to life. The marriage of Tamils signifies the moral character of a combination of two minds. It also conveys a lot of information about the economy in terms of the fact that it is important for life. It clearly depicts the moral life and character of the people in the cultural life of caste, religion, language, race, culture, etc., in the realization of children's education, possessions, food, etc., and the professionalization of life. It is characteristic of this article to explain this. It clearly depicts the Children's education, possessions, food, etc., giving meaning to their lives in a professional manner, and cultural life such as caste, religion, language, race, culture, etc. The purpose of this article is to explain these.

**Keywords:** Kalithokai, Numbers, Ancient Tamils, Cultural Life, Caste, Religion, Race.

## முன்னுரை

பழமையான இனத்தின் நாகரிக வளர்ச்சியை பண்பாட்டு ஒழுங்கமைவை, சமூகக் கட்டமைப்பைத் தெரிந்து கொள்வதற்கு அச்சமூகஇலக்கியக் குறிப்புகள் துணைபுரிகின்றன. சங்க இலக்கியங்களே வாழ்வியல் முறைகளைப் பற்றி கண்ணாடிபோல படம் பிடித்துக் காண்பிக்கின்றன. தமிழ் மக்களுக்கே உரிய பண்பு நலன்கள் சமூக ஒழுங்கமைவு, நாகரீக கட்டமைப்பு வாழ்வியல் விழுமியங்கள் அறக்கோட்பாடு போன்றவை உள்ளடக்கிய பண்பே வாழ்வியல் முறை என்று முன்னோர்கள் எடுத்துரைக்கின்றனர். கலித்தொகையில் நெறிமுறைக்குட்பட்ட வாழ்வு, நெறிமுறைக்குட்படாத வாழ்வு என்ற சமூக நிகழ்வுகளைப் பற்றிக் கூறுகின்றது (Sindhu, 2022). கற்றறிந்தார் ஏத்தும் கலி என்ற சிறப்புடைய இக்கலித்தொகையில் உள்ள தமிழரின் வாழ்வியல் முறையில் அறியலாகும் செய்திகளைப் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருமண முறை

தமிழில் திருமணம் என்ற சொல்லுக்கு கூடுதல் என்று பொருள். இதன் வேர்ச்சொல் மண் என்பதாகும். மணம் என்பது நறுமணத்தைக் குறிப்பினும் பழங்கால வழக்கில் இச்சொல் பல பொருளைத் தழுவுதல், நெருங்குதல், கலத்தல், கூடுதல், அழகு பெறுதல் எனப் பல பொருள்படும். மண் இயற்கை மணமுடையது. அதனை மண்மணம் என்பது தமிழர் வழக்கு. இல்லறத்திற்கு நுழைவு

வாயிலாக அமைவது. மணம் என்ற சொல் குறிப்பிடுவதன் காரணம் மண்ணைப் போன்று பொறுமை, அமைதி, எதையும் தாங்கும் வலிமை இவற்றை மணமக்கள் பெறுதல் வேண்டும் என்பதே அடிப்படை என முன்னோர்கள் கூறுவர். இக்குணங்களை மணமக்கள் பெற்றுத் திகழ்வதை வள்ளுவரின் பண்பாக,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்ற குறளின் வழி இல்லற வாழ்வில் பொறுமை எனும் பண்பு தலைத்தோங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார் (Subramaniyan, 2012). வள்ளுவர் கூறும் திருமண வாழ்க்கைக்காக கலித்தொகையில் ஏறு தழுவும் வழக்கம் கொண்டிருந்தனர். ஏறுதழுவும் விழாவில் ஆண்கள் விரும்பி பங்கேற்றனர். தான் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ள, தன் வீரத்தைக் காட்ட, புகழ்பெற ஆணிற்கு கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாக ஏறு தழுவும் விழாவை மேற்கொண்டனர். பெண்கள் ஏறுதழுவாதவனை மணக்கமாட்டார்கள். தான் விரும்பிய பெண்ணைப் பார்த்தவுடன் ஏறுதழுவச் சம்மதித்துப் பெண்ணை அவன் மணப்பதற்குச் சான்றோர்கள் பெண் கேட்டுச் செல்கின்றனர். அதனை,

"சாற்றுள் பெடை அன்னார் கண் பூத்து

நோக்கும் வாய்! எல்லாம்

மிடை பெறின் நேராத் தகைத்து"

என்று சுற்றத்தார் திருமணத்திற்கு ஏறுதழுவும் விழாவினை நடத்துகின்றனர் .இவை பார்க்குமிடமெல்லாம் விழாக் கோலத்துடன் மகளிர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்ற செய்தியை அறிவுறுத்துகின்றது (Viswanathan, 2010). இன்றளவும் திருமணம் என்றாலே மதம், மொழி, இனம் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் மகிழ்வோடு அன்பைப் பரிமாறிக் கொள்கின்ற ஒன்றாகும். சங்க கால தமிழர்கள் வாழ்வில் தாமாகக் கூடுவது களவு வாழ்க்கை என்றும், பெரியோர்களால் கூட்டப்பட்ட வாழ்க்கை கற்பு வாழ்க்கை என்றும் கொண்டிருந்தனர். அதனை,

"கற்பெனப் படுவது காரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள் வதுவே"

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது (Ilampuranar, 2016). இம்முறையினையே கலித்தொகையும் ஆங்காங்கே தம் பாடல்களில் சுட்டிச் செல்கின்றது என்பதை ஏறுதழுவுதல் பாடல்கள் கொண்டு அறியலாம்.

## தொழில் முறை

பழங்கால மனிதன் இயற்கையாக கிடைத்த உணவினை உண்டுவந்தான். மேலும் தனது வளர்ச்சியின் மூலம் பல்வேறு தொழில் முறைகளைக் கண்டறிந்து மக்களின் வாழ்வியலை உயர்த்திக் கொண்டு சமூகம், பண்பாடு பொருளாதாரத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் என்னும் தொழில் வளர்ச்சியில் அறிவைப் பயன்படுத்தினான். மேலும் தான் கற்றுக் கொண்ட தொழிலில் ஏற்படும் போட்டிகளில் வெற்றிபெற அவரவர் திறமைகளைக்காட்டி பல்வேறு தொழில்கள் பற்றியும் அத்தொழிலின் மூலம் பயன் அடைவதையும் அறிந்திருந்தான். இதனைக் கலித்தொகையில்,

"நிலன் நாவில் திரிதரூஉம் நீள்மாடக் கூடலார்"

என்ற வரியின் மூலம் அறியலாம் (Viswanathan, 2010). நீண்ட மாடங்கள், மாளிகைகள், அரண்மனை, வீடுகள் போன்றவற்றில் மக்கள் வாழ்ந்து வந்தனர் என்ற செய்தியினைக் கொண்டு அவர்களது தொழில் முறையின் வளர்ச்சியினையும் பயனையும் அறியலாம். கலித்தொகையில் காணலாகும் செய்தியினைக் கொண்டு இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் நிலாவிற்கே சென்று தங்கும் அளவிற்கு தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது பெருமை மிகுந்த செயலாகும்.

"காணி நிலம் வேண்டும் - பராசக்தி

காணி நிலம் வேண்டும் - அங்கு

தூணி லழகியதாய் - நன்மாடங்கள்

துய்ய நிறத்தினதாய் - அந்தக்

காணி நிலத்திடையே - ஓர் மாளிகை

கட்டித் தர வேண்டும்"

என்ற பாடல்வழி அதனை உணரலாம் (Bharathiyar, 1992).

## கோயில் வழிபாடு மற்றும் விழா கொண்டாடும் முறை

விழாக்களும் கோயில்களும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாகும். இன்றளவும் விழாக்கள் கொண்டாடுவதைக் காணலாம். திருவிழா என்றாலே கோயில்தான். கோயில் என்றாலே திருவிழாதான். இவை ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன. மக்களது வாழ்வில் நீர் முக்கிய பங்கு வகிப்பதால் நீர் நிலைக்கு அருகிலேயே கோயில்கள் அமைந்துள்ளன என்பதை அறியலாம். கலித்தொகையில் திருவிழா கொண்டாடுவதை,

"சாலகத்து ஒல்கிய கண்ணீர் "உயர் சீர்த்தி

ஆல் அமர் செல்வன் அணிசால் மகன் விழாக்

காள் கோள்" என்று ஊக்கி"

என்று திருவிழா நடைபெறும் நிகழ்வாக, சிவபெருமானின் மகன் முருகனுக்கு இன்று காப்புக்கட்டுத் திருவிழா என்று சொல்லிக் கொண்டு முருகனை மகளிர் கண்டனர் என்று கூறுகின்றது (Viswanathan, 2010). இன்றளவும் முருகனுக்கு விழா எடுத்தல், மதுரையில் கள்ளழகர் வைகைஆற்றில் எழுந்தருளித்தல் எனும் விழா வெகு விமரிசையாக கொண்டாடுகின்றனர். கோயிலில் குடமுழுக்கு பூசை செய்தும் கொண்டாடுகின்றனர். மேலும்,

"ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட மாலைபோல்"

என்ற கலித்தொகையின் மூலம் தெய்வம் உரையும் மரத்திற் கன்று போட்ட பசுவின் நஞ்சுக் கொடியை ஆலமரத்தில் கட்டித் தொங்க விட்டும் பூசை செய்தனர் என்பதை அறியலாம் (Viswanathan, 2010).

## கலைகள்

மனிதனுக்கு இயல்பாக தோன்றும் உணர்வு கலைகள். இதனை ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். கலைகளின் வளர்ச்சி தற்காலத்தில் மேன்மேலும் மேன்மையடைந்துள்ளன. இயற்கையோடியைந்த கலைகள் சமயத்துடனும், சமூகத்துடனும் இணைந்து காணப்படுகின்றன. அழகு உணர்ச்சி கலைகளில் பிரதிபலிக்கின்றன. கலித்தொகையில்,

"மணி மாலை ஊதும் குழல்"

"இயன் எழீஇயவை போல்"

"யாழ்வரைத் தங்கியாங்குத் தாழ்வு"

"மண மனைத் ததும்பும் நின் மண முழ

வந்து எடுப்புமே"

"ஓர்ந்து இசைக்கும் பறைபோல் நின் நெஞ்சத்து

வேட்டதே கண்டாய்"

"தண்ணுமை பாணி தளராது எழூஉக

பண் அமைஇன் சீர்க் குரவையுள் தென் கண்ணி"

என்ற பாடல்களின் வழி யாழ், துடி, இயன், முழவு, பறை, குழல், தண்ணுமை, தாளம் போன்ற இசைக்கருவிகளின் செய்தியினைக் காணலாம். மக்களில் இசைக்கு மயங்காதவர் எவருமில்லை. எனவே பண்பாட்டின் எச்சமாகக் கலைகள் காட்சி அளிக்கின்றன (Viswanathan, 2010).

"சிறகை விரித்தால் மயிலாட்டம்

சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம்

சீறிப் பாய்ந்தால் புலியாட்டம்

திரையில் மறைந்தால் நிழலாட்டம்"

என்ற பாடலின் மூலம் இசைக்கலையும் நாட்டியக்கலையும் இணைந்து ஒருங்கே அமைந்துள்ளன என்பதை அறியலாம் (Sakthivel, 2003). மேலும் ஏறுதழுவல் முடிந்த பிறகு மாதர் மகளிரும் மைந்தரும் தாதெரு மன்றத்தில் குரவை ஆடுவர் என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர். மேலும் வள்ளுவர்,

"குழல் இனிது யாழ் இனிது"

என்ற குறளின் மூலம் குழல், யாழ் இசையின் இனிமைவிட மழலையின் சொல் இனிமையானது என்று மிக அழகாகக் கூறியிருப்பதும் சிறப்புக்குரியதாகும் (Subramaniyan, 2012).

## அறநெறி வலியுறுத்தும் முறைகள்

அறம் என்ற சொல்லுக்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என்ற எட்டுவகையான பொருள்கள் பெரு வழக்காக வழங்குகின்றன. அறம் என்பது மனித வாழ்வின் மதிப்பீடான விழுமியங்களை உருவாக்குவதாகும். இவை இயற்கையோடு இயைந்து காணப்படுகின்றன. உயிரினங்கள் வழி அன்புநெறி, உலகிற்கு உணர்த்தும் அறநெறிகள் என்று வலியுறுத்துகின்றன.

"துடி அடி கயந்தலை கலக்கிய சின்னீரைப்

பிடி ஊட்டி பின் உண்ணும் களிறு"

ஆகிய அடிகளில் யானைக் கன்றுகள் கலக்கிய சிறிதளவு நீரைத்தான் உண்ணாமல் பெண் யானைக்கு ஊட்டிப் பின்னுண்ணும் யானை போல அன்பு நெறிக் கொண்டு வாழ வேண்டும் என்று கலித்தொகை உணர்த்துகின்றது (Viswanathan, 2010). அதேபோல திருக்குறளும்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது"

உலகத்தாரிடம் அன்பு செலுத்துவதால் இல்லற வாழ்வில் பண்பாகவும் அதன் விளைவாக அறத்தையும் பெறுவான் என்றுரைக்கின்றது (Subramaniyan, 2012). அன்பு நெறியும் அறநெறியும் இல்வாழ்வுக்கு இன்றியமையாததாக அமைகின்றது. எனவே தான் கலித்தொகை,

"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை

அறிவு எனப்படுவது பேதையார் சொல் தோன்றல்

செறிவு எனப்படுவது கூறியது மாறா அமை

நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை

முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்வௌவல்

பொறை எனப்படுவது போன்றாரைப் பொறுத்தல்"

என்ற கருத்துக்களை, தனிமனித இல்லற சமூக அறக்கருத்துகளைப் பெரிதும் வலியுறுத்துகின்றது (Viswanathan, 2004). அற ஒழுக்கத்தை முழுவதும் ஏற்றுத்தவறாமல் நடப்பது மிக அரிது. அவ் ஒழுக்கத்துடன் வாழ்ந்து அருள்பெறாமல் வாடுபவர்களுக்கு உதவுதல் வேண்டும் என்ற அறிநெறியையும் உணர்த்துகின்றன. ஆகையால், "அறமெனப்படுவது யாதெனின் மறவாதுகேள்" என மணிமேகலையில் அறம் என்பதாவதெனின் என்று அறம் குறித்து விளக்கிச் செல்கின்றது (Backiamary, 2014).

## முடிவுரை

வாழ்வுக்கு நலம் பயக்கும் வாழ்வியல் முறைகள் கலித்தொகையில் காணப்படுகின்றன. திருமண முறைகள், தொழில் முறைகள்,கோயில் வழிபாடு, விழாக்கள் கொண்டாடும் முறை, விளையாட்டு முறைகள், அறநெறி வலியுறுத்தும் முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்றவை கலித்தொகையில் அதிகம் பேசப்படுகின்றன. இவ்வாறு அறியப்படும் இச்செய்திகளின் வழி பண்டைத்தமிழரின் வாழ்க்கை முறை எவ்வாறு அமைந்திருந்தன என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் அறநெறியும் அன்புநெறியும் மக்களின் வாழ்வியல் முறையில் இணைந்து காணப்படும் ஓர் உயர்ந்த செய்திகள் என்பதையும் கலித்தொகையில் பரவலாகக் காணப்படுகின்ற செய்திகளாகும்.

## References

Backiamary, F. (2014) Vagamai Nokkil Ilakkiya Varalaru, New Century Book House, Chennai, India.

Bharathiyar, (1992) Bharathiar Kavithaikal, Sri Hindu Pathippagam, Chennai, India.

Ilampuranar, (2016) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Sakthivel, S. (2003) Naattuppura eyal aaivu, Manivasagar publications, Chennai, India.

Subramaniyan, Sa.V. (2012) Pathenen Keelkanaku Noolgal, Manivasagar Pathipagam, Chennai, India.

Viswanathan, A. (2007) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License